போடலாம். சிலர் பத்திரிகைகளில் வந்தது சரி என்று எப்பொழுது தங்களுக்கு தோதாக இருக்கிறதோ அப்பொழுது எடுத்துக்கொள்கிறார்கள். எப்பொழுது சரியில்லையோ அப்பொழுது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறார்கள். நீதி மன்றத்திலிருக்கிறது என்ற காரணத்தினால் விவாதிக்க வேண்டாமென்று சொல்லவில்லை. நேற்றைய தினம் நான் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு இரண்டாம் தேதி நடந்தது சரியா என்று மீண்டும் தீர்ப்பு அளிப்பதற்கு அவசியம் இல்லை என்ற தீர்ப்பை அளிக்கிறேன்.

(ஆ) பேரவைத் துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். இந்த நிலையில் தாங்கள் இந்தச் சபையை நடத்திச் செல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் ஒரு வழக்கறிஞர். அவர் சட்ட மன்ற விதிமுறைகளைப் படித்துவிட்டு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1972–ம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(3) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவைத் துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் அவர்களுடைய ஒழுங்குப் பிரச்னைக்கு ஏற்கனவே நாம் பதில் சொல்லிவிட்டாலும் மீண்டும் விளக்க விரும்புகிறேன். அப்படியொரு நம்பிக்கையில்லாத் தீர்மானம்